மாலையே ரேடியோவிலே அவருடைய நிலை மாற்றப்பட்டு விட்டது என்று செய்தி வருகிறது. இப்படி நாளுக்கு நாள், நிமிடத்திற்கு நிமிடம், நேரத்திற்கு நேரம் என்ன சொல்கிறீர்கள், என்ன செய்கிறீர்கள், என்ன நடக்கும் என்று தெளிவான விளக்கத்தை அரசு தரப்பிலே மக்களுக்கும் அவைக்கும் தரவேண்டும். அப்படித் தராவிட்டால் கூட்டம் நடத்துவதால் நாம் பங்கெடுத்துக்கொள்வதால் பலன் மக்களுக்குப் போய்ச் சேருமா என்றால் சேராது. இந்த உரையைப் பார்க்கிறபோது ஏதோ அடுத்து வருகிற தேர்தலுக்கு அள்ளித் தருகிற கோஷங்களைப்போல் தேர்தல் வாக்குறுதி களைப்போல் இருக்கிறது. தமிழகத்தில் 70 இலட்சம் குழந்தை களுக்கு உணவு கொடுக்கிறீர்கள். அந்தக் குழந்தைகளுக்கு எடை கூடுகிறது என்று சொல்கிறீர்கள். சரி, அவர்களை சாப்பிட கூப்பிடுவதற்கு முன்னாலே எந்த குழந்தையையாவது எடை போட்டீர்களா? எப்படி எடை கூடியது என்று சொல்கிறீர்கள்? சாப்பிட்டுவிட்டு ஆஸ்பத்திரிக்குப் போகிற வாந்தியெடுக்கிற குழந்தைகளைப்பற்றி ஏன் சொல்லவில்லை. ஆகவே அப்படிச் சொல்வது சரியல்ல, இந்த அறிக்கையிலே தொழில்கள் கிடையாது, வேலைக்கு உத்திரவாதம் கிடையாது, தமிழகம் நிலையான நிலையை நோக்கி முன்னேற அஸ்திவாரம் கிடையாது, அடிப்படையில்லாத ஒரு அறிக்கை என்று சொல்லி என் வார்த்தை களை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 1–30.)

5. அறிவிப்பு

பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

இன்று கூடிய அலுவல் ஆய்வு குழுவில் எடுக்கப்பட்ட முடிவு களுக்கு இணங்க பேரவையின் நடவடிக்கைகள் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

17-2-84 (வெள்ளிக்கிழமை) 18-2–1984 (சனிக்கிழமை)	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்.
19-2-1984 (ஞாயிற்றுக் கிழமை)	விடுமுறை
20-2-1984 (திங்கட்கிழமை)	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதமும் பதிலுரையும்
21-2-1984 (செவ்வாய்க்கிழமை)	அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறை வேற்றுதலும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

22-2-1984 காலை (புதன்கிழமை)		அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.
	பிற்பகல் 4–00 மணி	தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி மற்றும் வெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள நிலை குறித்தும் நிவாரணம் குறித்தும் பேரவையின் முன் வெள்ளை அறிக்கை வைக்கப்படின் அதன் மீது விவாதம். (குறுக்கீடு) இதுவரை வைக்கவில்லை, வைத்துவிடுவார்கள்.
23-2-1984 (வியாழக்கிழமை)		1. அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். 2. அரசினர் தனித் தீர்மானங்கள்.

தேவையிருப்பின் பேரவை 24-2-1984 (வெள்ளிக்கிழமை) கூடும். பேரவை மீண்டும் 3-3-1984 அன்று கூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 17-2-1984 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

—எதுவுமில்லை—

TAMIL NADU LEGISLATIVE [illegible]ARY
1 SEP 1984
MADRAS-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS